**VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST**
(Autonomous & Residential)
[Affiliated to Madurai Kamaraj University]
**B.A. / B.Sc.** Degree (Semester) Examinations, November 2018
Part – IV : Non-Major Subject : First Semester : Paper – I

# தமிழ் மொழியின் அடிப்படைக்கூறுகளும் தமிழ் இலக்கிய வரலாறும்

Under CBCS – Credit 2

Time: **2** Hours Max. Marks: **75**

## பகுதி – அ

**I அனைத்து வினாக்களுக்கும் விடையளி : (10 × 1 = 10)**

1. உயிரெழுத்துக்களின் எண்ணிக்கை
   அ) 12 ஆ) 13 இ) 14 ஈ) 15
2. மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை
   அ) 18 ஆ) 19 இ) 17 ஈ) 20
3. ஆய்த எழுத்தின் எண்ணிக்கை
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு
4. குறில் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும்
   அ) ஆம் ஆ) இல்லை இ) உண்டு ஈ) ஆம், இல்லை
5. எழுத்தின் மொத்த எண்ணிக்கை
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
6. திருவள்ளுவர் இயற்றியது திருக்குறள்
   அ) ஆம் ஆ) இல்லை இ) எதுவுமில்லை ஈ) உண்டு
7. 133 – அதிகாரம் கொண்ட நூல்
   அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) கீதை ஈ) இன்னாநாற்பது
8. முப்பால் என அழைக்கப்படும் நூல்
   அ) திருக்குறள் ஆ) நாலடியார் இ) கீதை ஈ) இன்னாநாற்பது
9. பத்துப்பாட்டு நூல்களின் மொத்த எண்ணிக்கை
   அ) 10 ஆ) 12 இ) 14 ஈ) 15
10. எட்டுத்தொகை நூல்களின் மொத்த எண்ணிக்கை
    அ) 8 ஆ) 9 இ) 10 ஈ) 12

## பகுதி – ஆ

**II எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக : (5 × 2 = 10)**

11. உயிர் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
12. சார்பெழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
13. மெய் எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
14. திருக்குறளை இயற்றியவர் பெயர் குறிப்பிடுக.
15. திருக்குறளின் அதிகாரம் எத்தனை?
16. இளங்கோ அடிகள் இயற்றிய நூல் எது?
17. திருக்குறளில் ஒரு அதிகாரத்தில் எத்தனை பாடல்கள் உள்ளன?

## பகுதி – இ

**III அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடையளி : (3 × 9 = 27)**

18. அ) உயிர் எழுத்துக்கள். **(அல்லது)**
    ஆ) மெய் எழுத்துக்கள் - சுட்டுக.
19. அ) சார்பெழுத்துக்கள் முதல் ஐந்தின் பெயரைச் சுட்டுக. **(அல்லது)**
    ஆ) சார்பெழுத்துக்களில் கடைசி ஐந்தின் பெயரைச் சுட்டுக.
20. அ) பத்துப்பாட்டின் முதல் ஐந்தின் பெயர் சுட்டுக. **(அல்லது)**
    ஆ) பத்துப்பாட்டின் கடைசி ஐந்தின் பெயரைச் சுட்டுக.

## பகுதி – ஈ

**IV எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடைதருக : (2 × 14 = 28)**

21. ஐம்பெரும்காப்பியம் - பெயர்களைச் சுட்டுக.
22. ஐஞ்சிறுகாப்பியம் - பெயர்களைச் சுட்டுக.
23. பத்துப்பாட்டு நூல்கள் - எடுத்துரைக்க.
24. எட்டுத்தொகை நூல்கள் - எடுத்துரைக்க.

✧✧✧✧✧

LTNE1B

# VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST

(Autonomous & Residential)

[Affiliated to Madurai Kamaraj University]

**B.A. / B.Sc. / B.Com. / B.Com. (CA)** Degree (Semester) Examinations, November 2018

Part – IV : Non-Major Subject : First Semester : Paper – I

**சிறப்புத்தமிழ் ~ நீதி இலக்கியமும், தமிழ் இலக்கிய வரலாறும்**

Under CBCS – Credit 2

Time: **2** Hours Max. Marks: **75**

## பகுதி – அ

**I சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக : (10 × 1 = 10)**

1. 'தெய்வப்புலவர்' என அழைக்கப்படுபவர்

அ) கம்பர் ஆ) திருவள்ளுவர் இ) இளங்கோ ஈ) சாத்தனார்

2. அன்பு எதை உருவாக்கும்

அ) ஆர்வத்தை ஆ) துன்பத்தை இ) கோபத்தை ஈ) துக்கத்தை

3. நாலடியாரைத் தொகுத்தவர்

அ) ஒட்டக்கூத்தர் ஆ) கம்பர் இ) பதுமனார் ஈ) சாத்தனார்

4. நாலடியார் மொத்தப் பாடலின் எண்ணிக்கை

அ) பத்து ஆ) ஐம்பது இ) எழுபது ஈ) நானூறு

5. அறியாமையைப் போக்கும் மருந்து

அ) கல்வி ஆ) செல்வம் இ) வீரம் ஈ) புகழ்

6. ஏழை அந்தணரை அரசனிடம் காட்டிக் கொடுத்தவன்

அ) பொற்கொல்லன் ஆ) அரசி

இ) அரசனின் மகன் ஈ) காவலர்கள்

7. தெனாலிராமன் பூனையின் விலை

அ) நூறு ஆ) இருநூறு இ) ஐம்பது ஈ) ஆயிரம்

8. எட்டுத்தொகை நூல்களில் அகப்புறம் பேசும் நூல்

அ) பரிபாடல் ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து

9. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்களின் எண்ணிக்கை

அ) நான்கு ஆ) ஐந்து இ) எட்டு ஈ) பத்து

10. சைவ அடியார்களை ________________ என்று அழைக்கின்றோம்.

அ) ஆழ்வார்கள் ஆ) சமணர்கள்

இ) நாயன்மார்கள் ஈ) பௌத்தர்கள்

## பகுதி – ஆ

**II எவையேனும் ஐந்தனுக்கு ஓரிரு வரிகளில் விடையளி : (5 × 2 = 10)**

11. திருக்குறளின் வேறு பெயர்களை குறிப்பிடுக.
12. நாலடியார் எத்தனை பகுப்புகளை உடையது? யாவை?
13. நாலடியார் கூறும் அழுகு யாது?
14. ஏழை அந்தணன் யாரையெல்லாம் காப்பாற்றினான்?
15. எட்டுத்தொகை நூல்களில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடு?
16. முதல் ஆழ்வார்கள் யார்?
17. இரட்டைக் காப்பியங்கள் எவை?

## பகுதி – இ

**III அனைத்து வினாக்களுக்கும் இரண்டு பக்க அளவில் விடையளி : (3 × 9 = 27)**

18. அ) 'அன்புடைமை' அதிகாரக் கருத்துக்களை வள்ளுவர் வழி எடுத்துரைக்க. **(அல்லது)**

ஆ) 'நாலடியார்' நூல்குறிப்புத் தருக?

19. அ) 'நெடுநல்வாடை' நூல் குறித்து எழுதுக? **(அல்லது)**

ஆ) 'சிறுபஞ்சமூலம்' நூலினை குறிப்பிடுக?

20. அ) 'சிலப்பதிகாரம்' காப்பியம் குறித்து விளக்குக? **(அல்லது)**

ஆ) 'மாணிக்கவாசகர்' குறிப்புரைக்க?

## பகுதி – ஈ

**IV எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடைதருக : (2 × 14 = 28)**

21. 'ஒழுக்கமுடைமை' அதிகாரக் கருத்தினை வள்ளுவர் வழி நின்று விளக்குக?
22. நுமக்குப் பாடமாகவுள்ள நாலடியாரில் கல்வி அதிகாரப் பாடற் கருத்துக்களை விளக்குக?
23. 'நன்றி கொன்ற மனிதன்' என்ற பஞ்சதந்திரக் கதையினை சுருக்கி எழுதுக?
24. 'பூனை விலை இருநூறு பொன்' தெனாலிராமன் கதையினைச் சுருக்கி எழுதுக.

✧✧✧✧✧

**VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST**
(Autonomous & Residential)
[Affiliated to Madurai Kamaraj University]

**B.A. / B.Sc.** Degree (Semester) Examinations, November 2018
Part – I : Language Tamil : First Semester : Paper – I

# இக்காலக் கவிதையும் உரைநடையும்

Under CBCS – Credit 2

Time: **3** Hours                                   Max. Marks: **75**

---

## பகுதி – அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :** **(10 × 1 = 10)**

1. தொழிலாளர்களின் உழைப்புக்குச் சாட்சியாக இருப்பது எது?
   அ) மக்கள் ஆ) உலகம் இ) அரசியல்வாதி ஈ) கடவுள்
2. கல்லைக் கனி செய்வோன் யார்?
   அ) தில்லையான் ஆ) ஏழுமலையான் இ) குன்றத்தான் ஈ) பட்டினத்தான்
3. கிழக்கு விழிக்கும் நேரம் கவிதையின் ஆசிரியர் யார்?
   அ) கண்ணதாசன் ஆ) அபி இ) மாலதி ஈ) வைரமுத்து
4. ஈரோடு தமிழன்பனின் இயற்பெயர் எது?
   அ) சி.மணி ஆ) புவியரசு இ) செல்லப்பா ஈ) செகதீசன்
5. பல பொருட்கள் செய்யப் பயன்படும் மண் எது?
   அ) செம்மண் ஆ) வண்டல்மண் இ) களிமண் ஈ) மணல்
6. நிறைவாழ்வு வாழ்கின்றவன் யார்?
   அ) குறைமனிதன் ஆ) நிறைமனிதன்
   இ) நடுவுநிலைமை ஈ) கீழ்நிலைமை
7. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள் எத்தனை?
   அ) 30 ஆ) 216 இ) 22 ஈ) 24
8. மொழிக்கு இறுதியில் வரக்கூடிய உயிரெழுத்துக்களின் எண்ணிகை யாது?
   அ) 12 ஆ) 14 இ) 10 ஈ) 11
9. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய யாப்பிலக்கண நூல் எது?
   அ) தொடையதிகாரம் ஆ) நன்னூல்
   இ) தொல்காப்பியம் ஈ) தண்டியலங்காரம்

10. கிளவி,கிழவி னி ஒலி வேறுபாடு அறிந்து எழுதுக.

அ) பாட்டி, தலைவி ஆ) தலைவி, பாட்டி

இ) சொல், தலைவி ஈ) தலைவி, சொல்

## பகுதி – ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக : (5 × 2 = 10)**

11. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 'கோவில் வழிபாடு' என்ற கவிதையில் இறைவனை எங்குக் கண்டதாகக் குறிப்பிடுகின்றார்?
12. க.நா. சுப்பிரமணியம் 'கவிதை' என்ற கவிதையில் கூற விரும்பும் மையக் கருத்து யாது?
13. பெற்றோரைப் பேணுதல் பற்றிச் சுவாமி சித்பவானந்தர் கூறும் கருத்தினை எழுதுக.
14. மொழி இறுதி எழுத்துக்கள் யாவை?
15. இருபதாம் நூற்றாண்டு மரபுக்கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. 'கறுத்த இருட்டை நாம் கைப்பிடித்த நாள்' என்று எந்த நாளைக் கவிஞர் மு.மேத்தா குறிப்பிடுகின்றார்?
17. நடுவுநிலைமைக்குச் சான்றாக சுவாமி சித்பவானந்தர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

## பகுதி – இ

**அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு பக்கங்களில் விடை தருக :**

**(5 × 5 = 25)**

18. அ) நாமக்கல் கவிஞர் குருதேவர் இராமகிருஷ்ணர் குறித்துக் கூறும் கருத்துக்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) தமிழ் மொழியின் சிறப்பினைப் பாரதியார் எங்ஙனம் குறிப்பிடுகின்றார்?

19. அ) விடியற்காலைப் பொழுதின் அழகினைக் கவிஞர் வைரமுத்து தம் கவிதையில் எங்ஙனம் வர்ணிக்கின்றார்?

**(அல்லது)**

ஆ) 'வாக்கு வரம் தரும் தெய்வம்' என்னும் கவிதையில் தமிழன்பன் கூறும் கருத்துக்கள் யாவை?

20. அ) குரு பக்தி குறித்துச் சுவாமி சித்பவானந்தர் கூறும் கருத்துக்களை எழுதுக.

**(அல்லது)**

ஆ) மக்கட் பேற்றின் தன்மை பற்றிச் சுவாமி சித்பவானந்தர் கூறுவன யாவை?

21. அ) முதல் எழுத்துக்கள் பற்றி விளக்குக.

**(அல்லது)**

ஆ) வல்லெழுத்து மிகா இடங்களைச் சான்றுடன் குறிப்பிடுக.

22. அ) மரபுப்பிழை நீக்குதல் பற்றிக் குறிப்பு வரைக.

**(அல்லது)**

ஆ) ஓர் எழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் குறித்து எழுதுக.

## பகுதி – ஈ

**ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக : (3 × 10 = 30)**

23. 'நீங்களே சொல்லுங்கள்' என்னும் கவிதையில் பாரதிதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.
24. கவிஞர் மு.மேத்தாவின் சுதந்திர ராகத்தினை அவர் தம் கவிதை வாயிலாக விளக்குக.
25. நிறை கல்வியின் மேன்மையினைச் சுவாமி சித்பவானந்தரின் உரைநடைக் கட்டுரை வாயிலாக எழுதுக.
26. வல்லினம் மிகும் இடங்கள் பற்றி விவரித்துரைக்க.
27. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் கட்டுரை வரைக.

✧✧✧✧✧

**VIVEKANANDA COLLEGE, TIRUVEDAKAM WEST**
(Autonomous & Residential)
[Affiliated to Madurai Kamaraj University]
**B.A. / B.Sc.** Degree (Semester) Examinations, November 2018
Part – I : Language Tamil : Third Semester : Paper – I


# காப்பியமும் பக்தி இலக்கியமும் நாடகமும்

Under CBCS – Credit 2

Time: **3** Hours Max. Marks: **75**

## பகுதி – அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க : (10 × 1 = 10)**

1. ‘வழக்குரை காதை’ இடம்பெறும் காண்டம் எது?
   அ) வஞ்சிக்காண்டம் ஆ) மதுரைக்காண்டம்
   இ) புகார்க்காண்டம் ஈ) பாலகாண்டம்
2. இருஞ்சமரம் தொலைத்த பிரான் யார்?
   அ) துரியோதனன் ஆ) கண்ணன் இ) நகுலன் ஈ) சகாதேவன்
3. ஆண்டாளின் காதல் பக்திக்குச் சான்றாகத் திகழும் பாடல் எது?
   அ) திருவெம்பாவை ஆ) திருப்பாவை இ) மூத்ததிருபதிகம் ஈ) தேவாரம்
4. சிவனின் அடிமுடி தேடியவர்கள் யாவர்?
   அ) பிரம்மன், திருமால் ஆ) திருமால், பிரம்மன்
   இ) முருகன், கணபதி ஈ) கணபதி, முருகன்
5. துரோணருக்குக் கட்டை விரலைக் காணிக்கையாகக் கொடுத்தவன் யார்?
   அ) அர்ச்சுனன் ஆ) ஏகலைவன் இ) தர்மன் ஈ) சகாதேவன்
6. திருவாசகம் எழுதியவர் யார்?
   அ) கம்பர் ஆ) ஒட்டக்கூத்தர் இ) அகத்தியர் ஈ) மாணிக்கவாசகர்
7. கருதிய பொருளை மறைத்து ஒத்த பிறிதொன்றால் வெளிப்படுத்துவது எது?
   அ) சிலேடை ஆ) உவமை இ) உருவகம் ஈ) பிறிதுமொழிதல்
8. நாள், மலர், காசு, பிறப்பு என முடியும் பாவகை எது?
   அ) வெண்பா ஆ) கலிப்பா இ) வஞ்சிப்பா ஈ) ஆசிரியப்பா
9. சிலப்பதிகாரம் எத்தனை காதைகளை உடையது?
   அ) முப்பது ஆ) பத்து இ) ஐம்பது ஈ) எழுபது

10. வைணவமதக் கடவுள் யார்?

அ) சிவன் ஆ) திருமால் இ) முருகன் ஈ) இந்திரன்

## பகுதி – ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :**

**(5 × 2 = 10)**

11. பாண்டியனிடம் கண்ணகி தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்தினாள்?
12. பசுவைக் காப்பாற்றிய ஆபுத்திரனுக்கு நேர்ந்தது என்ன?
13. வாலி இராமனால் வதைக்கப்பட்டதற்கான காரணத்தைக் கூறுக.
14. சைவ சமயக் குரவர் நால்வர் யாவர்?
15. ஆழ்வார்கள் எனப்படுபவர் யார்?
16. வைகைக் கரையை அடைக்கச் சிவபெருமான் வந்திக் கிழவியிடம் செய்த ஒப்பந்தம் யாது?
17. வெண்பா மற்றும் ஆசிரியப்பாவின் ஓசைகள் யாவை?

## பகுதி – இ

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்க அளவில் விடை தருக :**

**(5 × 5 = 25)**

18. அ) ஆபுத்திரன் எனப் பெயர் வந்த காரணத்தை விளக்குக.

**(அல்லது)**

ஆ) இராமனை வாலி எவ்வாறெல்லாம் இகழ்ந்து பேசினான்?

19. அ) சிவபெருமானின் தோற்றப் பொலிவினைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு விளக்குகிறார்?

**(அல்லது)**

ஆ) திருமாலின் பெருமைகளாக ஆண்டாள் கூறுவன யாவை?

20. அ) ஏகலைவனின் பாத்திரப் படைப்பை விவரி.

**(அல்லது)**

ஆ) 'நீயே தான் இந்தப் பிரபஞ்சம்' நாடகத்தில் ஜடாயு பாத்திரப் படைப்பை விவரி.

21. அ) உவமையணியின் இலக்கணம் கூறி எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

**(அல்லது)**

ஆ) கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற உன் நண்பரைப் பாராட்டிக் கடிதம் வரைக.

22. அ) பன்னிரு திருமுறைகளைப் பட்டியலிடுக.

**(அல்லது)**

ஆ) ஆழ்வார்கள் குறிப்பு வரைந்து, பன்னிரு ஆழ்வார்களின் பெயர்ப் பட்டியலைத் தருக.

## பகுதி – ஈ

**எவையேனும் மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக :**

**(3 × 10 = 30)**

23. கண்ணகி வழக்காடிய விதம் குறித்து விவரி.
24. அன்புடைமை குறித்துத் திருமூலர் கூறுவனவற்றை விவரிக்க.
25. 'வைகையில் வெள்ளம் வரும்' நாடகத்தின் கதைப் பொருளை விளக்குக.
26. வெண்பாவின் இலக்கணங் கூறி, அதன் வகைகளைச் சான்று தந்து விளக்குக.
27. ஐம்பெருங்காப்பியங்களை விவரிக்க.

✧✧✧✧✧